மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது ஆய்வில் இருக்கிறது. ஆகவே இதை அனுமதிக்க முடியாது. அம்மையார் பேசிய பேச்சை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்திர விடுகிறேன்.

(உ) போக்குவரத்து கழக ஊழியர் ஒருவர் உறுப்பினரிடம் நடந்து கொண்ட முறை குறித்து.

திருமதி ரமணி நல்லதம்பி: எல்லாம் ஆய்வில் இருந்தால் நான் எதைப்பற்றிப் பேசுவது. விதி 55-ன் கீழ் கொடுக்கப் பட்டதும் ஆய்வில் இருக்கிறது; அல்லது நிராகரிக்கப்படு கிறது. சட்ட மன்ற உறுப்பினராகிய என்னை இந்த அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்தில் பயணம் செய்கின்ற நேரத் தில் அந்தப் பேருந்தின் ஏஜெண்டு, என்னை அவமானப் படுத்தியவரை வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது குறித்து நீங்கள் மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு மனு கொடுத்திருக்கிறீர் கள். அந்த மனு உரிய அமைச்சர் அவர்களிடம் அனுப்பப் பட்டிருக்கிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அது பற்றி நீங்கள் இப்போது பேச வேண்டாம்.

முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி சென்னை ராஜ் பவனில் தங்கியிருந்தபோது தேர்தல் உடன்பாடு குறித்துப் பேசியதாகக் கூறப்படுவது குறித்து.

10.55 மணி

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள், முன்னாள் பாரதப் பிரதமருக்கு அவர் எந்த மாநிலத்துக்குச் சென்றாலும் அங்கே தங்குவதற்கு ராஜ் பவனைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று சொல்லி எப்போதும்போல அவர்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு மென்று நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்களுக்கு எழுதி இருந்து முன்னாள் பாரதப்பிரதமர் அவர்கள் ராஜ் பவனில் தங்கி இருந்தார்கள். தங்கியிருக்கின்றபோது பாண்டிச்சேரிக்கும் நம்முடைய அரசியல் விஷயமாக, அலையன்ஸ், ** கூட்டு. கட்சியிலே தொகுதி பங்கீடு விஷயமாகப் பேசப்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க க ற்றப்பெற்றது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1990 சனவரி, 27] [திரு. கோ. பூவராகன்]

பட்டிருக்கிறது. வெளியிலே பார்த்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவில்லை, தனியாக எல்லோரையும் அவர்கள் கலந்து பேசுவதற்கு இடம் அளிக்காமல் ஏதோ தனி பங்களா தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் பேசப் பட்டது. பொதுவாக ஒரு மரபு, ராஜ்பவனத்தை இது மாதிரி அரசியல் காரணங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது. கட்சியிலே தொகுதி உடன்பாடுபற்றிப் பேசிப் பகிர்ந்துக்கொள் வதற்கு, ஒப்பந்தம் போடுவதற்கு இதைப் பயன்படுத்துவது முறை யாக இருக்காது. இதுபற்றி நம்முடைய முதலமைச்சர் அவர் கள் என்ன நினைக்கிறார்கள். மற்ற கட்சிகளுக்கும் இது போன்று வருகின்ற போது ஏதாவது ஒரு இடத்தை ராஜ்பவனத்திலே ஒதுக்கித்தரமுடியுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைச் சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் கேட்டதிலே எதையும் நான் குறுக்கிட விரும்பவில்லை, அலையன்ஸ் பேசுகிறோம் ** ** ** ராஜ் பவனத்திலே தங்குவதற்குரிய எல்லா தகுதியும் எல்லா உரிமை யும் முன்னாள் பிரதமருக்கு உண்டு. கேபினட் அந்தஸ்த்திலே இருக்கின்றவர். அவர் அங்கே இருக்கின்ற நேரத்திலே, அவரை, அரசியல் தலைவர்கள் சந்திப்பதிலே தவறு இல்லை. ஆனால் கவர்னருடைய செயலாளர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரைத் தொடர்பு கொண்டு, அப்படி தலைவர்கள் அவரை போய் சந்திப்பது கவர்னருக்கு எம்பராசிங்-காக இருக்கும், தர்மசங்கடமாக இருக்கும் என்று சொன்ன காரணத்தை வைத்தே அந்தத் தகவல் வெளியே வந்ததே தவிர, நாங்கள் வேண்டு மென்றே எதையும் சொல்லவில்லை. அவர் அங்கே தலைவர் என்ற வகையிலே தங்கியிருக்கின்றபோது எல்லோரும் சென்று அவரைப் பார்ப்பதற்கு உரிமை உண்டு என்றுதான் நான் கருது கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு. பூவராகன் அவர்கள் விளக்கம் கேட்டபோது, 'அலை யன்ஸ்' என்பதைப்பற்றி குறித்த அந்த வார்த்தை, அது தொகுதி உடன்பாடு குறித்து பேசினார்கள் என்ற வார்த்தைகள் அவைக் குறிப்பிலே இருக்கலாம். ஆனால், காங்கிரஸ் கட்சி யினுடைய துணைத் தலைவர் குறிப்பிட்டுக் காட்டியதைப்போல 'அலையன்ஸ்' என்ற தொடர்பான அந்த வாசகத்தை அவைக் குறிப்பிலே இருந்து எடுத்துவிட தாங்கள் ஆணையிடுவீர்கள் என்று நான் நம்புகிறேன். அவர்கள் கேட்ட விளக்கத்திற்கு நம் முடைய காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அவர்களும் ஒரு விளக்கத்தை வழங்கியிருக்கிறார்கள். இந்திய நாட்டினுடைய

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி அவர்கள். ராஜ்பவனத்திலே தங்கியதைப்பற்றி எந்தப் பிரச்சினையும் நிச்சயமாக இல்லை. அவர்களுடைய பாதுகாப்பு குறித்து டெல்லியிலிருந்து மாநில அரசுக்கு வந்த தாக்கீதை யொட்டி புல்லட் புரூப் கார் உட்பட எல்லாவிதமான பாதுகாப்பும் முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. நான் அதைப்பற்றி மீண்டும் விளக்க விரும்பவில்லை. அரசியல் கட்சியினுடைய தலைவர்கள். இந்திய நாட்டினுடைய எதிர்க் கட்சித் தலைவரைச் சந்திக்க அங்கே சென்றதிலும் எந்தத்தவறும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால், அவர்கள் அங்கே தேர்தல் உடன்பாடு குறித்துப் பேசியதாகப் பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது. அரசியல் கட்சித் தலைவர்கள் அங்கே திரு. ராஜீவ்காந்தி அவர்களை சந்திக்க வரும்பொழுது என்ன பேச வருகிறார்கள் என்று நிபந்தனை போட்டுக்கொண்டு, அதற்குப்பிறகு கவர்னருடைய மாளிகையிலே அவர்களை யாரும் அனுமதிப்பது என்பது இயலாத காரியம். அவர்கள் சந்தித்த பிறகு தேர்தல் உடன்பாடு குறித்துப் பேசி இருப்பார்களானால் அதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் பொறுப்பாளி அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மன்ற உறுப்பினரால் 'அலையன்ஸ்' பற்றிப் பேசப்பட்ட பகுதிகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன். 'அலையன்ஸ்' என்பதைத் தொடர்ந்து பேசப்பட்டதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு).

(ஏ) காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து கர்நாடக முதல்வர் தெரிவித்துள்ள கருத்து.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவிரி நீர் பிரச்சினை சம்பந்தமாக கர்நாடக முதல்வரோடு நான் தொடர்பு கொண்டு பேசியிருக்கிறேன் என்று நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்தார்கள். ஆனால், நம்முடைய முதல்வர் அவர்கள் அப்படி என்னோடு பேசவில்லை என்று கர்நாடக மாநில முதலமைச்சர் அறிவித்து, அது பத்திரிக்கையில் வந்திருக்கிறது. அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

11.00 மணி

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினை என்பது நம்முடைய ஜீவாதார பிரச்சினை. அதில் அரசியலுக்கு இடமில்லை. ஆனால் இந்தப்